# <u>திருவேற்காடு நகராட்சி</u>
## <u>நகர்மன்ற சாதாரணக் கூட்டம்</u>

**2019ஆம் ஆண்டு மே மாதம் 28ம் நாள் செவ்வாய்கிழமை மாலை 5.00 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**நகராட்சி அலுவலகம்,**
**திருவேற்காடு**
**நாள்: 28.05.2019**

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

### <u>பொருள் எண். 1</u>

இந்நகராட்சியின் ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மற்றும் மே 2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.769** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

---

### <u>பொருள் எண். 2</u>

இந்நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மற்றும் மே 2019 மாதத்தின் செலவுச்சீட்டுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–_** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.770** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

---

### <u>பொருள் எண். 3</u>

இந்நகராட்சியில் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மற்றும் மே 2019ல் பதிவு செய்துள்ள பிறப்பு, இறப்பு, மற்றும் இறந்து பிறந்தகுழந்தைகளின் விவரம் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.771** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

---

### <u>பொருள் எண். 4</u>

தேசிய பசுமை தீர்ப்பாயம் அமைத்துள்ள திடக்கழிவு மேலாண்மை திட்ட மாநில கண்காணிப்புக் குழுவின் அறிவுரையின்படி ஒவ்வொரு நகர்புற உள்ளாட்சி நிறுவனமும் அந்தந்த உள்ளாட்சிக்கு தனியாக திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் செயல்திட்டம் தயார் செய்து, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் அனுமதி பெற்று சமர்ப்பிக்கும்படி அறிவுறுத்தப்பட்டது. அதன் பேரில் திருவேற்காடு நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மைக்கான கொள்கை மற்றும் செயல்திட்டம் தயார் செய்து சமர்பிக்கப்பட்டதில், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அவரது செயல்முறைகள் ந.க.எண்.2288/2019/பி3, நாள்.08.08.2019–ன்படி மேற்படி கொள்கை மற்றும் செயல் திட்டத்தினை மாவட்ட அரசிதழில் வெளியிடும்படியும், அதற்கு தேவையான நகர்மன்ற தீர்மான நிறைவேற்றவும் அறிவுறுத்தியுள்ளார். அதன் பிரகாரம் திருவேற்காடு நகராட்சிக்கு தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்றுள்ள திடக்கழிவு மேலாண்மை

கொள்கை மற்றும் செயல் திட்டத்தினை (SWM Policy and Action Plan) திருவள்ளூர் மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.772** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

---

## பொருள் எண். 5

இந்நகராட்சியில் 2017–2018 தணிக்கை அறிக்கையில் தணிக்கை பத்தி எண்.32ல் தணிக்கை கட்டணம் 31.03.2018 தெரிவிக்கப்பட்ட தொகை ரூ.201598/–ஐ அரசு தலைப்பில் செலுத்தப்பட்ட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.201598/–ஐ செலுத்த கோரியுள்ளது. மேலும், மேற்படி தொகையினை வருவாய் நிதியிலிருந்து செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.773** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

---

## பொருள் எண். 6

திருவேற்காடு நகராட்சி 28.50 சதுர கி.மீ. பரப்பளவு கொண்டதாகும். இதன் 2011ம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி 62824ம், 2017ம் ஆண்டு இடைக்கால கணக்கெடுப்பின்படி 89164 என மக்கள் தொகை உள்ளது. இந்நகராட்சியில் 22291 வீடுகளும் 800 வணிக நிறுவனங்களும், பள்ளிகள், கல்யாண மண்டபம் மற்றும் இதர கட்டிடங்கள் உள்ளன. நகராட்சியில் பாதாள சாக்கடை அமைப்பு இல்லாததால், கழிவுநீர் தொட்டிகள் (Septic Tank) கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. திருவேற்காடு நகராட்சியில் கழிவுநீர் அகற்றும் வாகனம் ஏதும் இல்லை. இந்நகராட்சி பகுதியில் தனியார் கழிவுநீர் அகற்றும் நிறுவனங்கள் 12 எண்ணிக்கை உள்ளன. இவை கழிவுநீர் ஏற்றிக்கொண்டு அதனை சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தின் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு (முகப்பேர் மற்றும் கோயம்பேடு) கொண்டு சேர்க்கப்பட வேண்டும். ஆனால், இந்த கழிவுநீர் வாகனங்கள் மேற்படி இடங்கள் 10 கி.மீ. தொலைவில் கொண்டு செல்ல வேண்டியிருப்பதாலும், வாகன நெரிசல் காரணமாகவும், வாகன பழுது காரணமாக திருவேற்காடு நகராட்சி ஆறு, குளம், ஏரி, பொது இடங்கள் மற்றும் சென்னை புறவழிச் சாலையின் ஓரத்தில் உள்ள கால்வாயிலும் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான மழைநீர் வடிகால்வாயிலும் 1. கோலடி ஏரிக்கரை, 2. அயனம்பாக்கம் ஏரிக்கரை, 3. சண்முகாநகர் கூவம் நதிபாலம் ( தீர்த்தகேணி ), 4. மதுரவாயல் புறவழிச்சாலை சேவைச்சாலை ( KG signature அடுக்குமாடி குடியிருப்பு அருகில்), 5. நூம்பல் சாலை ( விவேகானந்தா பள்ளி அருகில் ), 6. A .S shipping நிறுவனம் மற்றும் ஓம்சக்தி அபார்ட்மென்ட் அருகில், 7. R.M.K பள்ளி பின்புறம் கூவம் ஆறு சுந்தரசோழபுரம்) கழிவுநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம், நகராட்சிகளில் பெறப்படும் புகார்கள் மற்றும் நகராட்சி அலுவலர்களால் ரோந்து செய்யப்பட்டும் திருவேற்காடு நகராட்சி எல்லையில் இதுபோன்று நிகழ்வு ஏற்படும்போது நகராட்சியின் மூலம் பறிமுதல் செய்யப்பட்டு அபராத கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதன் விவரம் இணைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிரந்தர தீர்வு காண இதற்கான ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

திருவேற்காடு நகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டம் கொண்டு வரும் திட்டம் அரசின் பரிசீலணையில் உள்ளது. எனவே, இதற்கு தற்போது எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டது.

கழிவுநீரை, மழைநீர் வடிகாலில் கொட்டப்படும் வாகனங்களை பறிமுதல் செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்படுகிறது. இதுகுறித்து கழிவுநீர் அகற்றும் வாகன உரிமையாளர்கள் கூட்டம் கூட்டப்பட்டு விவாதிக்கப்பட்டபோது கழிவுநீரை ஏற்றிக்கொண்டு அதனை சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தின் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு (முகப்பேர் மற்றும்

கோயம்பேடு) கொண்டு சோர்க்கப்பட மேற்படி இடங்கள் 10 கி.மீ. தொலைவில் கொண்டு செல்ல வேண்டியிருப்பதாலும், வாகன நெரிசல் காரணங்களாலும் அவர்களுக்கு கழிவுநீர் அகற்ற பெறப்படும் கட்டணம் நடை ஒன்றிற்கு ரூ.900/– போதுமானதாக இல்லை என்றும், உரிய விலை நிர்ணயம் செய்து தரவும் கோரியிருந்தனர். இதனை பரிசீலனை செய்து திருவேற்காடு நகராட்சியில் கீழ்கண்டவாறு கட்டண விகிதங்கள் நிர்ணயம் செய்யலாம்.

| வ.எண் | விவரம் | லாரி கட்டணம் |
|---|---|---|
| 1. | தனிவீடுகளுக்கு (ஒரு நடைக்கு) | 1,000/– |
| 2. | அடுக்குமாடி குடியிருப்பு (ஒரு நடைக்கு) | 1,200/– |
| 3. | வணிக நிறுவனங்களுக்கு (ஒரு நடைக்கு) | 1,500/– |
| 4. | தொழிற்சாலைகளுக்கு (ஒரு நடைக்கு) | 2,000/– |

அவ்வாறு கட்டணம் நிர்ணயம் செய்த விவரம் குறித்து பொதுமக்களிடம் ஆட்சேபணைகள்/ ஆலோசனைகள் பெற நாளிதழ் மூலம் விளம்பரம் செய்யவும் அதன் பிறகு கட்டணம் நிர்ணயம் செய்துள்ளதை மாவட்ட அரசிதழில் வெளியிட்டு நடை முறைப்படுத்தவும் வீடுகளில் சேகரிக்கப்படும்,கழிவு நீரை தனியார் வாகனம் மூலம் எடுத்துசென்று தற்போது திருவேற்காடு நகராட்சிக்கு அருகில் உள்ள ஆவடி நகராட்சியில் செயல்படுத்தப்பட உள்ள பருத்திப்பட்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் 2 கி.மீ. தொலைவில் உள்ளதால் மேற்படி நிலையத்திற்கு கழிவுநீரினை கொண்டு சேர்ப்பதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுமதி கோரி கடிதம் சமர்ப்பிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) மேற்படி திட்டத்திற்கான செலவினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.774** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 7

திருவேற்காடு நகராட்சி 28.50 சதுர கி.மீ பரப்பளவில் 18 வார்டுகளை உள்ளடக்கிய தேர்வு நிலை நகராட்சியாகும். நகராட்சியின் தற்போதைய மக்கள் தொகை 89164 ஆகும். இந்நகராட்சி மூலம் 159.37 கி.மீ நீளத்திற்கு சாலைகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தெருமின் விளக்குகளின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | தெருமின் விளக்குகளின் விபரம் | எண்ணிக்கைகள் |
|---|---|---|
| 1. | 1 x 40 W Tube Light | 1343 |
| 2. | 4 X 36W CFL Lights | 1651 |
| 3. | 2 x 36W CFL Lights | 58 |
| 4. | 4 x 24W CFL Lights | 758 |
| 5. | 2 x 24W CFL Lights | 648 |
| 6. | 250W SV Lamp | 936 |
| 7. | 150W SV Lamp | 403 |
| 8. | 1 x 400W SV Lamp | 484 |
| 9. | 2 x 400W SV Lamp | 266 |
| 10. | 70W SV Lamp | 60 |
| 11. | 90W LED Fittings | 64 |
| 12. | 60W LED Fittings | 60 |
| | **Total** | **6731** |

மேற்கண்ட தெருமின் விளக்குகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்ள தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்கள் தங்கள் கடித ந.க.எண்.45490/2012/DO1 நாள்.12.04.2018–ன்படி அனுமதி அளித்துள்ளார்கள். அதன்படி, மேற்கண்ட தெருமின் விளக்குகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணியினை ஒரு

வருட காலத்திற்கு ரூ.126.85 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள **06.06.2018ல்** ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் மதிப்பீட்டை விட **0.46 %** குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.சன்வியூ எண்டர்பிரைசஸ், எண்.13, பாரதி நகர் பிரதான சாலை, கணபதி, கோயம்பத்தூர்–**641006** நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை இந்நகர்மன்ற தீர்மான எண்.387, நாள்.11.06.2018–ன்படி ஏற்றுக்கொண்டதையடுத்து திருவேற்காடு நகராட்சி ஆணையர் அவர்களின் செயலானைகள் ந.க.எண்.511/2018/இ1, நாள்.20.06.2018–ன்படி 01.07.2018 முதல் 30.06.2019 வரையிலான ஒரு வருட காலத்திற்கு மேற்படி பணியினை மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 01.07.2018 முதல் இதுநாள் வரையில் தெருமின் விளக்குகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் M/s.சன்வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்தாரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி, பணிக்கான ஒப்பந்த காலம் 30.06.2019 உடன் முடிவடையயுள்ள நிலையில் M/s.சன்வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்தாரர் 01.07.2019 முதல் 30.06.2020 வரையிலான ஒரு வருட காலத்திற்கு தற்போது உள்ள விலைவிகிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பணியினை தொடர்ந்து மேற்கொள்ள அனுமதி அளிக்குமாறு கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அ)** M/s.சன்வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்தாரர் மேற்படி தெருமின் விளக்குகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை குறைகளின்றி மேற்கொண்டு வருவதாலும், ஏற்கனவே அளித்துள்ள விலைவிகிதத்திலேயே பணியினை தொடர்ந்து மேற்கொள்ள அனுமதி கோரிய நிலையில் நகராட்சிக்கு கூடுதல் செலவினம் ஏற்படாத காரணத்தினாலும், தெருமின் விளக்குகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள போதிய பணியிடங்கள் இந்நகராட்சியில் இல்லாத காரணத்தினாலும், M/s.சன்வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்தாரர் மூலம் தொடர்ந்து பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதிக்காக கருத்துருவினை மேலனுப்பி வைத்திட மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**ஆ)** மேற்கண்ட பணிக்கான செலவினம் ரூ.126.85 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து தெருமின் விளக்குகளையும் LED விளக்குகளாக மாற்ற உள்ள திட்டத்தினை செயல்படுத்தும் வரை பணியின் அவசியம் கருதி தொடர்ந்து பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.775 நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண். 8</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுமார் 165 இடங்களில் ஆழ்துளை குழாய் கிணறுகள் மின்மோட்டார் வசதியுடன் அமைத்து மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மூலமாகவும் மற்றும் நேரடியாகவும் தெருகுழாய்களின் வழியே பொது மக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது நிலவி வரும் கடும் கோடை காலத்தினை முன்னிட்டு பெரும்பாலான இடங்களில் நிலத்தடி நீர்மட்டம் வேகமாக குறைந்து வருவதால் தண்ணீர் தட்டுபாடு ஏற்படுகிறது. எனவே, பொதுமக்களின் அடிப்படை வசதிக்காக கீழ்க்கண்ட இடங்களில் குடிநீர் பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| | **I. ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைத்து மின்மோட்டார் பொருத்துதல்.** | |
| 1. | கொன்ராஜங்குப்பம், தினேஷ் நகர், ஐ.சி.எப் காலனி, அம்பேத்கார் தெரு மற்றும் எல்லையம்மன் கோயில் தெரு ஆகிய பகுதிகளுக்கு ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 10.00 |
| 2. | நியூ சென்னை சிட்டி, ராஜாங்குப்பம் எஸ்(அன்)பி, பெரியார் நகர் மற்றும் அக்ரஹாரம் தெரு ஆகிய பகுதிகளுக்கு ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | 9.00 |

| | | |
|---|---|---|
| **3.** | வேலம்மாள் பள்ளி தெரு, ஈடன் அவென்யூ பின்புறம், அப்பல்லோ பிரதான சாலை மற்றும் செல்வலட்சுமி நகர் நீர்தேக்க தொட்டி அருகில் உள்ள பகுதிகளில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | **9.00** |
| **4.** | வடநூம்பல் பிரதான சாலை, இருளர் காலனி மற்றும் அம்பேத்கார் தெரு நீர்தேக்க தொட்டி ஆகிய பகுதிகளுக்கு ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | **9.20** |
| **5.** | பாலாஜி நகர், ராஜரத்தினம் நகர், பல்லவன் நகர், வானகரம் பிரதான சாலை, அக்ரஹாரம் மற்றும் ஐஸ்வர்யா நகர் பகுதிகளில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | **10.00** |
| **6.** | சொக்கலிங்கம் நகர், மகாலட்சுமி நகர், பிருந்தவனம் நகர், பெருமாள் கோயில் தெரு, காமாட்சி நகர், அம்மன் நகர் மற்றும் பிள்ளையார் கோயில் தெரு பகுதிகளில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | **6.30** |
| **7.** | அம்மன் நகர், திருமலை பாலாஜி நகர் மற்றும் பிள்ளையார் கோயில் தெரு பகுதிகளில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | **9.30** |
| **8.** | பாரதி நகர், சக்தி நகர், பாலகிருஷ்ணா நகர் மற்றும் சுந்தரசோழபுரம் பகுதிகளில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | **10.00** |
| **9.** | வெங்கடேஸ்வரா நகர், கீரின் பார்க், கிருஷ்ணா நகர் மற்றும் கோலடி பகுதிகளில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | **9.50** |
| **10.** | காமாட்சிபுரம், பாலாம்பிகை நகர், மகாலட்சுமி நகர், செல்வகணபதி நகர் மற்றும் கோலடி (லாரி தண்ணீர் நிரப்புமிடம்) பகுதிகளில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல். | **10.00** |
| | | **92.30** |
| | **II. 5HP திறன் கொண்ட நீர்முழ்கி மின்மோட்டார் மற்றும் ஸ்டார்ட்டர் சப்ளை செய்து பொருத்துதல்** | |
| **11.** | ஆழ்துளை குழாய் கிணறுக்கு தேவையான மின்மோட்டார் சப்ளை செய்தல். | **5.00** |
| | **III. தனியார் லாரிகள் அமர்த்துதல்** | |
| **12.** | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல். | **10.00** |
| | **மொத்தம்** | **107.30** |

**அலுவலக குறிப்பு**:-

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட குடிநீர் பணிகளின் அவசியம் கருதி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும், மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு கோரி ஈடு செய்யவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.776** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.9

இந்நகராட்சியில் இயங்கி வரும் பொலிரோ வாகன பதிவு எண். TN 20 CZ 0389 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்ய தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற **M/s.India Garage.,** நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.98112/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிக்கான செலவினத்தினை பொதுநிதியின் செலுத்திடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்கண்ட வாகன பயன்பாட்டின் அவசியத்தினை கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தொடர்ந்தமைக்கும், செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.777** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 10

இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் டேங்கர் லாரி வாகன பதிவு எண்.**TN 20 AJ 7477** வாகனத்திற்கு வருடாந்திர காப்பீடு (Insurance) 04.06.2019–வுடன் முடிவு பெறுவதால், ஒரு வருட காலத்திற்கு மேற்படி வாகனத்திற்கு காப்பீடு புதுப்பித்தல் செய்திடவும் அதற்காக பெறப்பட்ட காப்பீட்டு தொகை ரூ.38,877/– The New India Assurance Compaly Ltd., நிறுனத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை செலுத்தியதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.778** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.11

இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவின் கீழ் இயங்கி வரும் TATA Ace வாகன பதிவு எண். TN 12 J 8957 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்ய TATA Ace தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற **M/s.Popular Mega Motors India Private Limited.,** நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.84,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிக்கான செலவினத்தினை பொதுநிதியின் செலுத்திடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்கண்ட வாகன பயன்பாட்டின் அவசியத்தினை கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தொடர்ந்தமைக்கும், செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.779** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.12

இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவின் கீழ் இயங்கி வரும் TATA Ace வாகன பதிவு எண். TN 12 U 1038 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்ய TATA Ace தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற **M/s.Popular Mega Motors India Private Limited.,** நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.9,138/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிக்கான செலவினத்தினை பொதுநிதியின் செலுத்திடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்கண்ட வாகன பயன்பாட்டின் அவசியத்தினை கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தொடர்ந்தமைக்கும், செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.780** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.13</u>

இந்நகராட்சியில் இயங்கி வரும் பொலிரோ வாகன பதிவு எண். TN 20 AJ 7480 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்ய தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற **M/s.India Garage.,** நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.75150/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிக்கான செலவினத்தினை பொதுநிதியின் செலுத்திடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்கண்ட வாகன பயன்பாட்டின் அவசியத்தினை கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தொடர்ந்தமைக்கும், செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.781** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.14</u>

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.16 காடுவெட்டி ஏரிக்கரை தெருவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றில் பொறுத்தப்பட்டுள்ள 5HP திறன் கொண்ட மின்மோட்டார்களுக்கு மின் இணைப்பு பெற மின்சார வாரியத்திற்கு விண்ணப்பித்ததை தொடர்ந்து, உதவி செயற்பொறியாளர், இயக்குதல் மற்றும் பராமரித்தல் தமிழ்நாடு மின்சார வாரியம், பாரிவாக்கம் அவர்களால் பெறப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.31,140/—ஐ செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்கண்ட தொகை ரூ.31,140/—ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பொதுநிதியிலிருந்து தொகை செலுத்திடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.782** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.15</u>

திருவேற்காடு நகராட்சி 09.08.2010 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 62289, தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 89167 குடியிருப்புகளின் எண்ணிக்கை 22291 ஆகும். இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 28.82 மெட்ரிக்டன் திடக்கழிவு உருவாகிறது. மேலும், இந்நகராட்சியில் பெரிய வாகனங்களை கொண்டு குறுகிய தெருக்களில் குப்பைகளை அகற்ற இயலாததால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான **M/s. ஈக்காடு வேளாண்மைப் பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிட்.,** மூலம் 5 டிராக்டர் வாடகை அடிப்படையில் பயன்படுத்த, இந்நகர் மன்றம் தீர்மானம் எண்.726 நாள். 28/02/2019—ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்படி நிறுவனத்தின் மூலம் 5 எண்ணிக்கை சப்ளை செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. தற்போது அந்நிறுவனத்தின் பணி நீட்டிப்பு காலம் 31.05.2019 உடன் முடிவடைவதால், இந்நகராட்சியில் பொது மக்களின் பொது சுகாதார நலன்களை கருதியும், ஆங்காங்கே தேங்கியுள்ள குப்பைகள் மூலம் தொற்று நோய்கள் ஏற்படாமல் இருக்கவும், குறுகிய தெருககளில் குப்பைகளை அகற்றுவதற்கு ஏதுவாக 5 டிராக்டர் வாகனத்தினை ( ஜ-ீன்,

ஜூலை மற்றும் ஆகஸ்ட் 2019) மூன்று மாத காலத்திற்கு ஏற்கனவே மேற்கொண்டுவரும் நிறுவனத்தின் மூலம் அதே விலைவிகிதத்தின் அடிப்படையில் பணிநீட்டிப்பு வழங்கி பணி மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ. 9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:- அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.783** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

---

## பொருள் எண். 16

திருவேற்காடு நகராட்சியில் உள்ள 18 வார்டுகளில் 2011ம் ஆண்டு மக்க. தொகை கணக்கெடுப்பின் 62289 ஆகும். தற்போதைய மக்கள் தொகை சுமார் 89164 ஆகும். மேலும் நகராட்சி பகுதியில் 22291 குடியிருப்புகள் உள்ளன. பொது மக்களின் நலன் கருதியும், தட்ப வெப்ப நிலை பருவ கால மாற்றத்தினாலும், நிலத்தடி நீர் வெப்பத்தின் காரணமாக குறைந்து வருகிறது. குடியிருப்பு பகுதிகளில் தேங்கியுள்ள கழிவுநீர் மற்றும் குடிநீர் தொட்டியில் கொசுப்புழுக்கள் உற்பத்தி ஆகும் என்பதை கருத்தில் கொண்டு குடியிருப்பு பகுதிகள், தொழிற்சாலைகள், வணிக வளாகங்கள் ஆகிய பகுதிகளில் டெங்கு நோய் பரவக் காரணமாக கொசுகளைக் கண்டறிந்து ஆரம்ப நிலையிலேயே அழிக்கவும் மற்றும் கட்டுப்படுத்தவும், நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏதுவாக விடிவெள்ளி ஊரக மேலாண்மை டிரஸ்ட் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டு மேற்படி நிறுவனத்தின் 75 களப்பணியாளர்கள் வீடுவீடாக சென்று பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் 31.05.2019 உடன் முடிவடைந்துவிட்டது இதனை மேற்கொண்டு நகராட்சிகள் நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோரின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி இந்நகராட்சி பொது சுகாதார பணிகள் அவசியம் கருதியும் நோய்தடுப்பு முன்னேற்பாடு நடவடிக்கைக்காக 75 DBC, பணியாளர்களை கொண்டு (Source Reduction) செய்வதற்கு அனுபவம் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து நான்கு மாதங்களுக்கு களப்பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும், இதற்கான செலவின தொகை ரூ.40.36 இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை தினசரி நாளிதழில் வெளியிடவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:-

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பொது நிதியில் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.784** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 17

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பொது சுகாதார பயன்பாட்டிற்கும் பொறியியல் பிரிவு பயன்பாட்டிற்கும் மற்றும் அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் JCB வாகனம் எண். TN 12 T 6859 என்ற வாகனத்தின் 4 டயர்களும் பழுதாகி பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேலும் பருவமழை எதிர்கொள்ளும் நிலையில் பொது மக்களின் சுகாதாரத்தினை கருத்தில் கொண்டு மேற்கண்ட வாகனத்தின் பணியின் அவசர அவசியம் கருதி வாகனத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து புதியதாக 4 டயர்கள் வாங்கி பொருத்தி கொள்ளவும் அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ.1,20,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:-

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பொது நிதியில் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.785** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 18

திருவேற்காடு நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி வீசி எரியும் பிளாஸ்டிக் பொருட்கள் தமிழக அரசினால் உற்பத்தி செய்யவோ, சேமித்து வைக்கவோ மற்றும் பயன்படுத்துவதோ தடை செய்யப்பட்டுள்ளதால் நகராட்சி பகுதியில் முழுதும் பிளாஸ்டிக் பொருட்கள் தடை செய்ய பொதுமக்கள், வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் சிறு வியாபாரிகள் ஆகியோர்களிடையே பிளாஸ்டிக் விழிப்புணர்வு ஏற்படுத்திட அறிவிப்பு நோட்டிசுகள், விளம்பர பேனர்கள், பிளாஸ்டிக் பேனர்கள் ஆகியவை அமைத்து பிளாஸ்டிக் பொருளினால் ஏற்படக்கூடிய விளைவுகள் அடங்கிய பிராச்சார பேனர்கள் ஆகியன அமைக்கவும் மேற்படி பணிக்காக ஆகும் தோராய செலவினால் ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பொது நிதியில் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.786 நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 19

எதிர்வரவுள்ள நாடாளுமன்ற பொது தேர்தல் 2019—க்காக திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் அமையவுள்ள வாக்குசாவடி மையங்களில் தேவையான மின்வசதி, சாய்வு தள வசதி, குடிநீர் வசதி மற்றும் நிழற் வசதிக்காக தேவையான பந்தல்களை அமைக்குமாறு மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் மாவட்டம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சி பகுதிகளில் மேற்படி வசதிகள் இல்லாத வாக்குசாவடி மையங்களில் தேவையான வசதிகளை மேற்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலில் உள்ள நிலையில் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15—ன் கீழ் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் மூலம் குறைந்த விலைவிகிதங்கள் கோரியதில் குறைந்த விலைவிகிதம் அளித்த M/s.MSM எண்டர்பிரைசஸ் நிறுவனத்தாரர் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொண்டு நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்கண்ட பணிக்கான செலவினத்தினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.787 நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 20

திருவேற்காடு நகராட்சியில் உள்ள 18 வார்டுகளில் 2011ம் ஆண்டு மக்க. தொகை கணக்கெடுப்பின் 62289 ஆகும். தற்போதைய மக்கள் தொகை சுமார் 89164 ஆகும். மேலும் நகராட்சி பகுதியில் 22291 குடியிருப்புகள் உள்ளன. பொது மக்களின் நலன் கருதியும், தட்ப வெப்ப நிலை பருவ கால மாற்றத்தினாலும், நிலத்தடி நீர் வெப்பத்தின் காரணமாக குறைந்து வருகிறது. குடியிருப்பு பகுதிகளில் தேங்கியுள்ள கழிவுநீர் மற்றும் குடிநீர் தொட்டியில் கொசுப்புழுக்கள் உற்பத்தி ஆகும் என்பதை கருத்தில் கொண்டு குடியிருப்பு பகுதிகள், தொழிற்சாலைகள், வணிக வளாகங்கள் ஆகிய பகுதிகளில் டெங்கு நோய் பரவக் காரணமாக கொசுகளைக் கண்டறிந்து ஆரம்ப நிலையிலேயே அழிக்கவும் மற்றும் கட்டுப்படுத்தவும், நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏதுவாக விடிவெள்ளி ஊரக மேலாண்மை டிரஸ்ட் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டு 75 களப்பணியாளர்கள் வீடுவீடாக சென்று பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி நிறுவனத்தின்ஒப்பந்தகாலம் 31.05.2019 உடன்

முடிவடைந்துவிட்டது இதனை மேற்கொண்டு நகராட்சிகள் நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோரின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பணிகள் அவசியம் கருதியும் நோய் தடுப்பு முன்னேற்பாடு நடத்துவதற்காக 75 DBC, பணியாளர்களை கொண்டு (Source Reduction) செல்வதற்கு அனுபவம் வாய்ந்த நிறுவனங்களின் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோர அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து உரிய விதிமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோர கால தாமதம் ஆகும் என்பதாலும் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கெனவே இந்நகராட்சியில் களப்பணி மேற்கொண்ட விடிவெள்ளி ரூரல் டெவலப்மென்ட் டிரஸ்ட் நிறுவனம் மூலம் களப்பணி இரண்டு மாத காலத்திற்கு மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்கவும் அதற்காகும் தோராய செலவினம் 18.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:-

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பொது நிதியில் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.788** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**பொருள் எண். 21**

இந்நகராட்சிக்கு சொந்தமான திருவேற்காடு பேரூந்து நிலையம் அருகில் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் (ம) குளியல் அறை கட்டணம் வசூலிக்கும் குத்தகை உரிமம் 2017–18 முதல் 2019–2020 வரை (01.04.2017 முதல் 31.03.2010 வரை) மூன்றாண்டு காலத்திற்கான குத்தகை நிபந்தனைகளுக்குட்பட்டு பகிரங்கமாக ஏலம் விடப்பட்டு அதனடிப்படையில் உச்ச ஏலத்தொகை கோரிய, திரு.ஆ.முருகன் த/பெ ஆறுமுகம், எண்.111 பெருமாள் கோயில் தெரு, திருவேற்காடு அவர்களுக்கு மன்ற தீர்மான எண்.49 நாள்.30.12.2016 மற்றும் தீர்மான எண்.64. நாள்.31.01.2017–ன் படி குத்தகை விதிகளின் படி 01.04.2017 முதல் மூன்றாண்டு குத்தகை உரிமம் வழங்கப்பட்டு, மேற்படி குத்தகை இனத்தினை (கட்டண கழிப்பிடம்) கடந்த 2017–2018 மற்றும் 2018–2019 வரை நடத்தி, இதற்கான குத்தகை தொகை முழுவதும் நகராட்சிக்கு செலுத்தியுள்ளார்.

மேற்படி குத்தகைதாரர் திரு. முருகன் என்பவர் 12.03.2019–ம் தேதிய கடிதத்தில் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக 2019–2020 ஆண்டிற்கான மூன்றாம் ஆண்டின் குத்தகையினை தொடர்ந்து நடத்திட முடியாது எனவும், குத்தகை உரிமத்தினை ரத்து செய்து தருமாறு கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

எனவே மேற்படியாளரின் குத்தகை உரிமை காலம் 31.03.2019–ல் முடிவடைந்தது. அன்னார் 12.03.2019–ல் குத்தகையினை நடத்த முடியாது என குறுகிய காலத்தில் தெரிவித்திருந்தாலும், மேலும் சென்ற மார்ச் 2019–ல் பாரளுமன்ற தேர்தல் காரணமாக தேர்தல் கட்டுப்பாட்டு விதி அமுல் படுத்தப்பட்டு இருந்ததால், மேற்படிய இனத்திற்கான குத்தகையினை அலுவலக ரீதியாக ஒப்பந்தப்புள்ளி /ஏலம் கோர இயலாத நிலையில், அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று துறை சார்ந்த வசூல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது தேர்தல் கட்டுப்பாட்டு விதி விலக்கி கொள்ளப்பட்டுள்ளதால், மேற்கண்ட கட்டண கழிப்பிடம் மற்றும் குளியல் அறை கட்டணம் வசூலிக்கும் உரிமம் குத்தகையினை ஒப்பந்தப்புள்ளி / பொது ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளவும், தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும், இதற்கான செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேலும், துறைபூர்வ வசூல் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.656/2010/அ1)

**நகர்மன்ற தீர்மான எண்.789** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 22

திருவேற்காடு நகராட்சி பிரதான பழைய அலுவலத்தில் (சிவன் கோவில் தெரு) கணினி வசூல் மையம் இயங்கி வருகிறது. மேற்கண்ட பிரதான கட்டிடம் இடிக்கப்பட்டு அவ்விடத்தில் புதியதாக கட்டப்பட்டு வருவதால், சிவன் கோவில் அருகில் ஐய்யப்ப சாமி மடத்திற்கு சொந்தமான கட்டிடத்தில் வாடகை அடிப்படையில் தற்போது திருவேற்காடு நகராட்சி அலுவலகம் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட புதிய அலுவலகத்தில் பொது மக்கள் நலன் கருதி கூடுதலாக ஒரு வசூல் மையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

எனவே தற்போது இரண்டு கணினி வசூல் மையம் செயல்பட்டு வருவதை பொது மக்கள் அறியும் வகையில் விளம்பரம் படுத்திட (10x8) அளவில் விளம்பர பதாகை (Flex Banner) இரண்டு எண்கள் வைத்திட இந்நகர மன்ற தீர்மான எண்.658 நாள்,28.12.2018–ல் அனுமதி வழங்கியுள்ளதின் பேரில், அவசியம் கருதி உள்ளூர் பேனர் கடையான திரு.ஏ.ஜெயக்குமார், ஜெய் டிஜிட்டல் எண்.15 தம்பு சாமி நகர், சிவன் கோவில் தெரு, திருவேற்காடு சென்னை.77 அவர்களிடமிருந்து இரண்டு விளம்பர பேனர்கள் ஆங்கிள், விளம்பர பதாகை, பொருத்தும் கூலி உட்பட பொருத்தியதற்கும், இதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்: 1095/2017/அ1)**

**நகர்மன்ற தீர்மான எண்.790** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 23

திருவேற்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் முதற்கட்டமாக 9000 குடியிப்புகளுக்கு வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கும் பணிக்குண்டான ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு கடிதத்தினை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ததற்குண்டான பட்டியல் **M/s.Mark Media Communications,** No.13, Moores Road, Moores Garden, Thousand Light, Chennai-600006. என்ற நிறுவனத்திடமிருந்து கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விளம்பர செய்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விளம்பரம் மேற்கொண்டதற்கான பணி விபரம் | பட்டியல் எண். மற்றும் தேதி | பட்டியல் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | **M/s.Mark Media Communications,** No.13, Moores Road, Moores Garden, Thousand Light, Chennai-600006 | திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் (முதற்கட்டமாக 9000 குடியிப்புகள்) அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். (Revloving Fund) | 401<br>30.05.2019 | 1,55,926.00 |
| | | | **மொத்தம்** | **1,55,926.00** |

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.791** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 24

திருவேற்காடு நகராட்சி 2019–2020 ஆம் ஆண்டிற்கான அலுவலத்திற்க்கு தேவையன கணினி உபகரணங்கள், டோனர்கள், கணினி மோடம், Key Boards மற்றும் இதர உபகரணங்களை அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் விலைப்புள்ளி கோரி வாங்குவதற்கும் மற்றும் இதற்கான தோராய செலவினம் ரூ.8,00,000/–க்கு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.302/2018/அ1)

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி அளிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.792** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 25

திருவேற்காடு நகராட்சியில் தற்போது பணியாற்றும் மற்றும் இதற்கு முன்னர் பணியாற்றிய பணியாளர்களின் சேம நலநிதிக்கான வட்டி விகிதம் கடந்த 1993–1994 ஆம் ஆண்டு முதல் 2017–2018 வரை கணக்கீடு செய்து கருத்துரு அறிக்கை தயாரிக்கப்படவில்லை. தற்போது நிர்வாகத்தின் அவசியம் கருதி மேற்படி ஆண்டுகளுக்கு சேமநலநிதிக்கான வட்டி பணியாளர்கள் வாரியாக தயாரிக்க அனுபவம் வாய்ந்த கலந்தலோசகர் (Consultant) நிறுவனத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டு வட்டி விகிதிம் கணக்கிடப்பட்டுள்ளது. மேற்படி பணியினை விரைந்து முடிக்கப்படவேண்டும் என்பதனை கருத்திற் கொண்டு அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் முன்அனுமதி பெற்று வட்டி விகிதம் தயாரிக்க விலைப்புள்ளிகள் பெறப்பட்டு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துக்கொண்ட நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் முடித்தமைக்கும் இப்பணிக்கான விலைப்புள்ளி மன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

பணிக்கான விலைப்புள்ளி மற்றும் நிறுவனத்தரின் விபரம்

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | **M/s.Venkat Events,**<br>No.13, Vel Nagar Extn. (Near D.A.V School),<br>Adambakkam, Chennai-600 088. | 1,38,365/- |
| 2. | **M/s.N Tech Solutions,**<br>No.10, Gowthamar Street, East Tambaram,<br>Chennai – 600 059. | 1,32,225/- |
| 3. | **M/s.Rajren Soft System**<br>No.2, Muthiayal Reddy Nagar, 3rd Street,<br>Adambakkam, Chennai – 600 088. | 1,26,050/- |

மேற்கண்ட பணியின் அவசியம் கருதி திருவேற்காடு நகராட்சி பணியாளர்களின் சேமநல வட்டி கணக்கீடு செய்திட தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம். இதற்கான செலவினத்தினை பொது நிதியின் கீழ் வழங்கவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலக குறிப்பு :-** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.793** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 26

திருவேற்காடு நகராட்சி 2019–2020 ஆம் ஆண்டிற்கான அலுவலக உபயோகத்திற்கு தேவையான படிவங்கள், பாரங்கள், பதிவேடுகள் மற்றும் இதர எழுது பொருட்கள் தேவைப்படுவதால் ஆகியவற்றை அரசு அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு அச்சக நிறுவனத்தில் விலைப்புள்ளி கோரி வாங்குவதற்கும் மற்றும் இதற்கான தோராய செலவினம் ரூ.9,50,000/–க்கு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.302/2018/அ1)

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி அளிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.794** **நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 27

இந்நகராட்சி பகுதிகளில் உள்ள 18 வார்டுகளிலும் வறுமை கோட்டிற்கு கீழ் வரும் குடும்பங்களை கண்டறிந்து மறு சீராய்வு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதால், நகராட்சி பகுதிகளில் DBC களப்பணியாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் ஈடுபடுத்திடவும், இப்பணிக்கு தேவையான கணக்கெடுப்பு படிவங்கள், ஒளி நகல்கள், அச்சிடவும், மேலும், களப்பணியாளர்கள்

நேரடி களஆய்வு மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கிடவும் மற்றும் இப்பணிக்கு தேவையான கணக்கெடுப்பு படிவங்களின் பதிவுகள் அனைத்து கணினியில் பதிவேற்றம் செய்வதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. **(ந.க.3171/2019/எச்1)**

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.795 நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 28

உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத்தால் அரசாணை எண்.78 மற்றும் 172 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.05.2017 மற்றும் 13.10.2017 ன் திரு.L.ரகுராமன் மனை எண் 03 S O B சாலை கே கே நகர் சென்னை–600 078 சுந்தரசோழவரம் கிராமம் சர்வே எண்.40/3 41/1A சென்னை–600077 என்ற திருவேற்காடு நகராட்சிக்குட்பட்ட சுந்தரசோழவரம் கிராமம் சர்வே எண்.40/3 41/1A குடியிருப்பு மனைப்பிரிவு இடத்தில் சாலைப்பகுதி1375 சதுர மீட்டர் இடமும், திறந்த வெளி பகுதிக்காக 447 சதுர மீட்டர் இடமும் நகராட்சிக்கு தானப்பத்திரம் **(Gift Deed)** உறுப்பினர்–செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம் அவர்களின் கடிதம் எண்./6542/2018, நாள் 26–04–2019ன் படி) தானப்பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது மேற்படிய ஆவணம் இந்நகராட்சியில் ஒப்படைக்கபட்டுள்ளது இதனை மேற்க்கொண்டு இந்நகராட்சியில் சொத்தாக்கிக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது

**(ந.க.எண் 1311/2019/எப்1)**

**அலுவலக குறிப்பு:**

உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம் அவர்களின் கடிதம் எண்./6542/2018, நாள் 26–04–2019ன் படி கடிதத்தில் தெரிவித்துள்ளதன்படி, மேற்படி மனைப்பிரிவு இடத்தில் சாலைப்பகுதி திறந்த வெளி இடங்களை மனைப்பிரிவு உரிமையாளரால் பதிவு செய்யப்பட்டு இந்நகராட்சியில் ஒப்படைக்கபட்டுள்ள தானப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள இடத்தின சொத்தாக்கி கொள்ளுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.796 நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 29

திருவேற்காடு நகராட்சியின் 2019–20 ஆம் ஆண்டிற்கான பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு, வருவாய் பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவுகளின் உபயேகத்திற்கு தேவையான படிவங்கள், சொத்துவரி ரசீதுகள், பதிவேடுகள், பிறப்பு மற்றும் இறப்பு தொடர்பான படிவங்கள், நகரமைப்பு பிரிவிற்கு தேவையான படிவங்கள் அகியவற்றை அரசு அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு அச்சக நிறுவனத்தில் விலைப்புள்ளி கோரி வாங்குவதற்கும் மற்றும் இதற்கான தோராய செலவினம் ரூ.9,50,000/–க்கு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.302/2018/அ1)

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி அளிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.797 நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 30

உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத்தால் அரசாணை எண்.78 மற்றும் 172 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.05.2017 மற்றும் 13.10.2017 ன் திரு.பி.பவன் குமார் மனை எண் 01 லட்சுமி நகர் கோலடி கிராமம் சர்வே எண்.16/1B,(Pt)1C2 2B1 17/1B 18/2 3 19 20./1A1 1A2 1B1 1B2 சென்னை–600 077 என்ற திருவேற்காடு

நகராட்சிக்குட்பட்ட கோலடி கிராமம் சர்வே எண்.16/1B,(Pt)1C2 2B1 17/1B 18/2 3 19 20./1A1 1A2 1B1 1B2 குடியிருப்பு மனைப்பிரிவு இடத்தில் 1) சாலைப்பகுதி 104820 சதுர அடி இடமும், திறந்த வெளி பகுதிக்காக 17171 சதுர அடி இடமும் நகராட்சிக்கு தானப்பத்திரம் **(Gift Deed)** உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம் அவர்களின் கடிதம் எண்./22015/2018, நாள் 18–02–2019ன் படி) தானப்பத்திரம் பதிவு. செய்யப்பட்டுள்ளாது மேற்படிய ஆவணம் இந்நகராட்சியில் ஒப்படைக்கபட்டுள்ளது இதனை மேற்கொண்டு இந்நகராட்சியில் சொத்தாக்கிக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**(ந க எண்2974/2018/எப்1)**

**அலுவலக குறிப்பு:-**

உறுப்பினர்–செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம் அவர்களின் கடிதம் எண்./22015/2018, நாள் 18–02–2019ன் கடிதத்தில் தெரிவித்துள்ளதன்படி, மேற்படி மனைப்பிரிவு இடத்தில் சாலைப்பகுதி திறந்த வெளி இடங்களை மனைப்பிரிவு உரிமையாளரால் பதிவு செய்யப்பட்டு இந்நகராட்சியில் ஒப்படைக்கபட்டுள்ள தானப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள இடத்தின சொத்தாக்கி கொள்ளுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.798 நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 31

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் வீடுதோறும் விடுதலின்றி குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது. அவ்வாறு சேகரம் செய்யப்படும் மக்கும் மற்றும் மக்காத தன்மை கொண்டவை என தரம் பிரிக்கப்படுகிறது. மக்காத மற்றும் மறு சுழற்சி செய்ய இயலாத கழிவுகள் பிளாஸ்டிக் கோணிப்பைகளில் அடைக்க நாள் ஒன்றுக்கு 250 வீதம் போரா கோணிப்பைகள் தேவைப்படுவதால் துப்புரவு ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளதை தொடர்ந்து போரா பிளாஸ்டிக் கோணிப்பைகள் வாங்கி உபயோகப்படுத்த, பணியின் அவசர அவசியம் கருதி உள்ளதால் விலைப்புள்ளி கோர நகர் மன்ற தீர்மானம் எண் : 678, நாள் : 31.01.2019 அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் முடிவிற்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது. (2284/2018/எச்1)

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | பணியின் விவரம் | தொகை |
|---|---|---|---|
| 1. | J.J.எண்டர்பிரைசஸ்<br>ஆண்டவர் நகர்,<br>திருவேற்காடு,<br>சென்னை-77 | 1. One Ton Bag 1No:<br>2. Bora Bag 1No:<br>3. Bottle Bag 1No:<br>4. 50Kg Bag 1No:<br>5. 25Kg Bag 1No: | 152–00<br>24–00<br>16–00<br>10–00<br>8–00 |
| 2. | ஆர்ஜீன் பிளாஸ்டிக் பேக்ஸ்<br>No: 122 B, காமதேனு நகர்<br>6வது தெரு, திருவேற்காடு. | 1. One Ton Bag 1No:<br>2. Bora Bag 1No:<br>3. Bottle Bag 1No:<br>4. 50Kg Bag 1No:<br>5. 25Kg Bag 1No: | 200-00<br>26–00<br>18–00<br>12–00<br>10–00 |

**அலுவலக குறிப்பு:-**

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள m/s.J.J.எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் அவர்களின் விலைப்புள்ளி குறைவாகவுள்ளதால் இவ்விலைப்புள்ளிகளை மன்றம் ஏற்று அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.799 நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 32</u>**

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் வீடுதோறும் விடுதலின்றி குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து சேகரம் செய்யப்படுகிறது. மக்காத மற்றும் மறு சுழற்சி செய்ய இயலாத கழிவுகள் தேக்கமடைந்து பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தப்படாமலும், தொற்று நோய்கள் ஏதும் ஏற்படாத வகையில் பாதுகாப்பாக போரா பிளாஸ்டிக் கோணிப் பைகளில் அடைக்க கோணிப்பைகள் நாள் ஒன்றுக்கு 250 தேவைப்படுவதாக இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் தெரிவித்துள்ளார். ஆகவே போரா பிளாஸ்டிக் கோணிப்பைகள் வாங்கி உபயோகப்படுத்த புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோர கால தாமதம் ஆகும் என்பதாலும் மேலும் நாடாளுமன்ற தேர்தல் தேதி அறிவிப்பு வெளியிடப்பட்டதாலும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலில் இருந்தால், நகர் மன்ற தீர்மானம் எண்: 678- ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து ஏற்கெனவே பணி உத்திரவு வழங்கப்பட்ட J.J.எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் மூலம் சப்ளை செய்யப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் போரா கோணிப்பைகள் 01.04.19 முதல் முதற்கட்டமாக வாங்கிக்கொள்ளவும் இதற்கான தோராய செலவீனம் 9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு ஏற்கெனவே போரா கோணிப்பைகள் மேற்படி நிறுவனத்தால் சப்ளை செய்யப்பட்ட வகையில் எஞ்சிய தொகை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (2284/2018/எச்1)

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.800 நாள்.28.05.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**ஒம்/-தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

/உண்மை நகல்/

**ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**